பக்கங்கள்:-24

# காலை முரசு

| முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | மார்கழி 09 | திங்கட்கிழமை | 25.12.2023 | அதிர்வு 146 |
|---|---|---|---|---|---|






# மலையக மக்களுக்கு நியாயத்தை வழங்குவதற்கான காலம் உதயம்

## பேசியது போதும் செயல் வடிவமே தற்போது தமக்கு அவசியமாகியுள்ளது என்கிறார் சஜித்



“மலையக மக்களுக்கு நியாயத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கான காலம் உதயமாகியுள்ளது. பேசியது போதும் செயல் வடிவமே தற்போது எமக்கு அவசியமாக உள்ளது.”

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர்சஜித்பிரேமதாஸ தெரிவித்தார்.

06

## வெற்றிலைக்கேணி கடலில் நேற்று மிதந்து வந்த 35 கிலோகிராம் கஞ்சா





(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கு, வெற்றிலைக் கேணி கடலில் நேற்று மிதந்து வந்த 35 கிலோகிராம் கஞ்சா கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

கடலில் மிதந்த பொதிகளை மீட்ட கடற்படையினர் அவற்றில் கஞ்சா இருப்பதைக் கண்டுபிடித்தனர்.

இவ்வாறு மீட்கப்பட்ட 35 கிலோகிராம் கஞ்சாவும் 16 பொதிகளில் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் சந்தேகநபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை.




பதில் பொலிஸ்மா அதிபராக நியமிக்கப் பட்டுள்ள தேசபந்து தென்னக்கோன் அப்பதவியில் தொடர்வது சர்ச்சையை உருவாக்கி இருப்பதாகத் தெரிகின்றது.

அவருக்குப் பதில் பொலிஸ்மா அதிபர் நியமனத்தை – பதவியை – மூன்று மாதங்களுக்கு வழங்கி அரசமைப்புக் கவுன்ஸில் அங்கீகாரம் கொடுத்திருந்தது.

இந்த நிலையில், அவர்

06



மலையக மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் “200 இல் மலையகம் மாற்றத்தை நோக்கி” எனும் தொனிப்பொருளில் நுவரெலியாவில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.











## கார் விபத்தில் தந்தை சாவு; மகன் படுகாயம்

### கம்பளையில் சோகம்

கம்பளை – நாவலப்பிட்டி பிரதான வீதி எக்கால பகுதியில் கார் ஒன்று, வீதியை விட்டு விலகி வீடொன்றின் வாசல் மீது வீழ்ந்து விபத்துக்குள்ளாகியதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கம்பளை நீதிமன்றத்தில் கடமையாற்றி வந்த உலப்பனையைச் சேர்ந்த நீல் ரோஹன அபயரட்ன என்ற குடும்பஸ்தரே விபத்தில் பலியாகியுள்ளார்

அவர் தனது 16 வயது மகனுடன் பயணித்த சந்தர்ப்பத்திலேயே மேற்படி விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தில் காயமடைந்த சிறுவன் கம்பளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார். மேற்படி சம்பவம் தொடர்பான விசாரணைகளை எக்கால பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# ஜனாதிபதித் தேர்தலில் தமது வெற்றி வாய்ப்பு உறுதியானதும் உத்தியோகபூர்வ அறிவிப்பாம்

## இப்படிக் கூறுகின்றார் தம்மிக்க பெரேரா



"ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெறுவதற்கு தேவையான 51 சதவீதத்துக்கும் அதிகமான வாக்குகளை பெற்றுக் கொள்ளமுடியும் என்ற நம்பிக்கை எனக்கு ஏற்பட்டதன் பின்னர் தேர்தலில் இறங்குவது பற்றிய எனது உத்தியோக பூர்வமான அறிவிப்பு வெளியாகும்."

– இவ்வாறு பிரபல வர்த்தகர் தம்மிக்க பெரேரா தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜனபெரமுனவின் சார்பில் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு தம்மிக்க பெரேரா உட்பட நால்வரின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன என அக்கட்சின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சாகர காரியவசம் ஊடகவியலாளர் சந்திப்பில் குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில், பொதுஜனபெரமுனவின் சார்பில் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் களமிறங்குவதற்குத் தயாராகின்றீர்களா என்று கொழும்பு ஊடகம் ஒன்று கேள்வி எழுப்பிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

"நான் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கு தயாராகவே உள்ளேன். எனது பெயர் பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் பட்டியலில் உள்ளீர்க்கப்பட்டுள்ளதாக அக்கட்சியின் செயலாளர் பகிரங்கமாக அறிவித்துள்ளார்.

அவ்வாறான நிலையில், நான் இன்னமும் உத்தியோக பூர்வமான முடிவை எடுக்கவோ அறிவிக்கவோ இல்லை. எவ்வாறாயினும், ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெறுவதற்குத் தேவையான 51 சதவீதமான வாக்குகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கை உருவாகின்றபோது நான் ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராகக் களமிறங்கும் முடிவு தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பைச் செய்வேன்" – என்றார்.

# ஐக்கிய மக்கள் சக்தியின் கூட்டணியில் இனவாதிகளை இணைத்துக்கொள்ளாதீர்!

## சிறுபான்மை இன மக்களின் கட்சிகள் கோரிக்கை

ஐக்கிய மக்கள் சக்தி தலைமையில் அமையவுள்ள கூட்டணியில் இனவாதிகளை இணைத்துக்கொள்ள வேண்டாம் என்று அக்கூட்டணியில் அங்கம் வகிக்கும் தமிழ் முற்போக்குக் கூட்டணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் என்பன வலியுறுத்தியுள்ளன.

புதிய கூட்டணியை அமைப்பதற்கான ஏற்பாடுகள் தற்போது தீவிராக இடம்பெற்றுவருகின்றன.

இதில் டலஸ் அணி உறுப்பினர்களும் இணையவுள்ளனர். இதில் சிலருக்கு பதவிகள் வழங்கப்படவுள்ளன.

இந்நிலையிலேயே இனவாதம் கக்குபவர்களுக்கும், கடும்போக்குவாதிகளுக்கும் இடமளிக்க வேண்டாம் என ஐக்கிய மக்கள் சக்தியின் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டாரவிடம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

தமிழ் முற்போக்கு கூட்டணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகியவற்றின் தலைவர்கள் இதனைக் கூட்டாக வலியுறுத்தியுள்ளனர் எனத் தெரியவருகிறது.

"ராஜபக்ஷ அரசின் வீழ்ச்சிக்கு இனவாதிகளே காரணம். தற்போது ராஜபக்ஷர்கள் சுயாதீனமாக இருந்தாலும் அவர்களை இணைத்துக்கொண்டால் அது தமிழ் பேசும் மக்கள் மத்தியில் அதிருப்தியை உருவாக்கும்" என அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

# மாத்தறை சிறைச்சாலையில் கைதிகளைப் பார்க்கத் தடை

மாத்தறை சிறைச்சாலையில் உள்ள கைதிகளை வெளியாள்கள் பார்வையிடுவதற்குத் தற்காலிகமாகத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலை சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஹேமந்த ரணசிங்க தெரிவித்துள்ளார்.

மாத்தறை சிறைச்சாலையிலிருந்து காய்ச்சல் காரணமாக மாத்தறை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நோயாளர்களின் எண்ணிக்கை தற்போதுவரை 16 ஆக அதிகரித்துள்ளது.

காய்ச்சல் காரணமாக அண்மையில் மாத்தறை பொது வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த மாத்தறை சிறைச்சாலையின் மூன்று கைதிகளில் ஒருவர் கடந்த 22ஆம் திகதி இரவு உயிரிழந்தார்.

அக்குரஸ்ஸ பிரதேசத்தைச் சேர்ந்த 28 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்தார்.

அந்த இளைஞரின் சடலம் மீதான பிரேத பரிசோதனை அறிக்கையை வழங்கிய மாத்தறை சட்ட வைத்திய அதி




காரி மரணம் தொடர்பில் வெளிப்படையான தீர்ப்பை வழங்கியுள்ளார்.

அத்துடன், மேலதிக பரிசோதனைகளுக்காக உடற்பாகங்களை பொரளையிலுள்ள மருத்துவ ஆராய்ச்சி நிறுவகத்துக்கு அனுப்புமாறு பணிப்புரை விடுத்துள்ளார்.



# வவுனியாவில் எம்.ஜி.ஆரின் 36 ஆவது ஆண்டு நினைவு

**(கி.வசந்தரூபன்)**

வவுனியா, டிச.24

தமிழக முதலமைச்சர் எம்.ஜி.ஆரின் 36 ஆவது நினைவு தினம் வவுனியாவில் உள்ள விருந்தினர் விடுதியில் இன்று நேற்று இடம்பெற்றது.

இதன்போது எம்.ஜி.ஆரின் திருவுருவப்படத்திற்கு தீபமேற்றி, மலர் அஞ்சலியும் செலுத்தப்பட்டதுடன், நினைவுப் பேருரையும் இடம்பெற்றது.

வவுனியா எம்.ஜி.ஆர் நற்பணி மன்றத்தின் ஏற்பாட்டில் வர்த்தக நலன் புரி சங்கத்தின் தலைவர் கோ.சிறீஸ் கந்ததராஜா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சட்டத்தரணி தயாபரன், நற்பணி மன்ற உறுப்பினர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.









# கழிவுகள் கொட்டும் இடமாக மாறுகின்ற வவுனியா பூந்தோட்டம் பொதுச்சந்தை!




**(கி.வசந்தரூபன்)**

வவுனியா, பூந்தோட்டம் பொதுச்சந்தையில் கோழிக் கழிவுகளை சிலர் கொட்டுவதால் அந்தப் பகுதியில் சுகாதார சீர்கேடான நிலைமை உருவாகியுள்ளது.

வவுனியா நகரசபையின் நிர்வாகத்தின் கீழ் உள்ள பூந்தோட்டம் பொதுச்சந்தை கடந்த சில மாதங்களாக இயங்காத நிலையில் உரிய பராமரிப்பின்றி உள்ளது.

இந்நிலையில் அண்மைய நாள்களாகப் பொதுச்சந்தை வளாகத்தில் கோழி இறைச்சியின் கழிவுகளை சிலர் வீசிச் செல்கின்றனர். இதனால் அந்தப் பகுதியில் சுகாதார சீர்கேடான நிலைமை உருவாகியுள்ளது. வீசப்படும் கழிவுகளை மிருகங்கள், பறவைகள் காவிச்செல்வதால் அந்தபகுதியில் துர்நாற்றம் வீசும் நிலையும் காணப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பாக வவுனியா நகரசபை கவனம் செலுத்தி கழிவுகளை வீசுவோர் மீது சட்டநடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுப்பதுடன் சந்தையைப் புனரமைத்து மக்கள் பாவனைக்காக கையளிக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

பூந்தோட்டம் பொதுச்சந்தை நீண்ட காலமாக இயங்காத நிலையில் அதற்கு அண்மையில் பல தனியார் இறைச்சி விற்பனை நிலையங்கள் செயற்பட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.


## இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகம்
## இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகம்
## இணைந்து



**"தாயகஒலி" பிரதம ஆசிரியர்**

***தம்பு சிவா அவர்களின் (தம்பு.சிவசுப்பிரமணியம்)***

**(அகவை 80) அமுத விழாவை முன்னிட்டு**

**நடத்தும்**

## சிறுகதைப் போட்டி

**இருபிரிவுகளாக நடத்தப்படும்**

**(பரிசுத் தொகை 1 இலட்சம்)**

1. சிறுகதைப் போட்டி சகலருக்குமானது
2. பாடசாலை மாணவர்களுக்கான திறந்த போட்டி

* போட்டிக்கான படைப்புகள் அனைத்தும் சொந்தப்படைப்பாக அமைய வேண்டும். ஏற்கனவே வெளிவந்தபடைப்புக்கள் ஏற்றுக்கொள்ள படமாட்டாது.
* பாடசாலை மாணவர்களுக்கான ஆக்கப்படைப்புகள் யாவும் அப் பாடசாலை அதிபரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
* 2024ம் ஆண்டு பெப்ரவரி 15ஆம் (15.02.2024) திகதிக்கு முன் படைப்புகளை அனுப்பி வைக்க வேண்டப்படுகின்றீர்கள்.

* **நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.**

***அனுப்ப வேண்டிய முகவரி :***

இணைப்பாளர்
இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகம்
இல. 9 - 2/1 நெல்சன் பிளேஸ்
கொழும்பு 06.
தொடர்புகளுக்கு 0771 877 999, 011 2364124

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உட்பட நான்கு பொலிஸ் அதிகாரிகளை அடிப்படை உரிமை மீறல் வழக்கு ஒன்றில் சித்திரவதை இழைத்த குற்றவாளிகளாக கண்டிருக்கும் உயர் நீதிமன்றம், சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்ட முன்னாள் படை வீரருக்கு தேசபந்து தென்னக்கோன் உட்பட நான்கு பொலிஸ் அதிகாரிகளும் தங்கள் சொந்த பணத்திலிருந்து தலா 5 லட்சம் ரூபாவை நஷ்ட ஈடாகச் செலுத்த வேண்டும் என உத்தரவிட்டமையுடன், அந்த நான்கு பொலிஸ் அதிகாரிகள் மீதும் துறை ரீதியான நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ் ஆணை குழுவுக்கும் உத்தரவிட்டது.

உயர்நீதிமன்றத்தின் இந்த உத்தரவு தொடர்பில் நடவடிக்கை எடுக்க முடியாது தடுமாறுகிறது பொலிஸ் ஆணைகுழு.

அரசமைப்பு ஏற்பாடுகளின்படி பொலிஸ்மா அதிபர் பதவி நியமனத்திற்கு அங்கீகாரம் அளிக்கும் அதிகாரம் அரசமைப்பு கவுன்ஸிலுக்கே உண்டு. அந்த அரசமைப்பு கவுன்ஸில் தேசபந்து தென்னக்கோனுக்கு பதில் பொலிஸ்மா அதிபர் பதவியை மூன்று மாதங்களுக்கு வழங்கி அங்கீகாரம் அளித்துள்ளது.

உயர்நீதிமன்ற உத்தரவுப்படி அவர் மீது பொலிஸ் ஆணை குழு ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதாயின் அது அரசமைப்புக் கவுன்ஸில் மேற்கொள்ளும் நியமனத்தில் பொலிஸ் ஆணை குழு தலையிடும் விவகாரமாகி விடாதா என்ற சிக்கல் பொலிஸ் ஆணைக் குழுவுக்கு.

இதனால் இது விடயத்தில் தமக்கு உத்தரவை வழங்கிய உயர்நீதிமன்றத்திடமே வழிகாட்டுதலைக் கோருவது என்ற முடிவுக்கு சட்டமா அதிபரின் ஆலோசனையுடன் பொலிஸ் ஆணைக்குழு வந்திருப்பதாகத் தெரிகிறது.

தேசபந்து தென்னக்கோன் விடயத்தில் எந்த மட்டத்தில் தாங்கள் ஒழுங்கு நடவடிக்கை எடுக்க முடியும் என்பது தொடர்பில் தங்களுக்கு உரிய வழிகாட்டுதலை வழங்கும்படி பொலிஸ் ஆணைக்குழு உயர் நீதிமன்றத்திடம் விண்ணப்பித்திருப்பதாகத் தெரிகின்றது.

மேற்படி பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிரான அடிப்படை உரிமை மீறல் வழக்கில் தண்டனைத் தீர்ப்பை வழங்கிய மூன்று நீதியரசர்களைக் கொண்ட அதே உயர்நீதிமன்ற ஆயத்தின் முன்னிலையில் பொலிஸ் ஆணைக்குழுவின் இந்த விண்ணப்பம் விரைவில் வரவிருப்பதாக தெரிகின்றது.

+ + +

நேற்று நுவரெலியாவில் நடந்த 'மலையகம் -200' நிகழ்வில் பங்குபற்றுவதற்காக விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவரும் இந்திய நாடாளுமன்ற உறுப்பினருமான தொல்.திருமாவளவன் நேற்று முன்தினம் நள்ளிரவு கொழும்பு வந்து சேர்ந்தார் என்று நேற்று இப்பத்தியில் குறிப்பிட்டு இருந்தேன். அது தவறு. அவர் புறப்பட விருந்தார். எனினும் திருச்சியில் இருந்து விமானம் புறப்படுவது நீண்ட நேரம் தாமதமானதால் அவர் பயணத்தை ரத்துச் செய்தார் என்று இப்போது அறிய வருகிறது.

நேரம் தாமதமாகி கொழும்பை அவர் வந்தடைந்தாலும், கட்டுநாயக்கா விமான நிலையத்தில் இருந்து நுவரெலியாவுக்கு உடனடியாக ஹெலிக்கொப்டரில் அவரைக் கூட்டிவரக் கூட நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் தயாராக இருந்தனர்.

அப்படி செய்தும் நிகழ்ச்சியின் நேரத்துக்கு அவர் வந்து சேர முடியாத அளவுக்கு விமானப் புறப்பாடு தாமதமானதால் அவர் தமது இலங்கை வருகையை இம்முறை ரத்துச் செய்ய வேண்டியதாயிற்று என்று விடயம் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

திருச்சிக்குப் பதிலாக அவர் சென்னையில் இருந்து கொழும்புக்கு வரத் தயாராகி இருப்பாராயின் மாற்று விமானங்கள் மூலம் நேரத்துக்கு அவர் கொழும்பை வந்தடைய ஏற்பாடுகள் செய்திருக்க முடியும் என்றும் - அந்த வட்டாரங்கள் கூறின.

---

## மலையக மக்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மலையக மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் "200 இல் மலையகம் மாற்றத்தை நோக்கி" எனும்தொனிப்பொருளில் நுவரெலியாவில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"மலையக மக்களின் 200 ஆண்டு சிறப்புமிக்க வரலாற்றையும் பரிசுத்தமான பாரம்பரியத்தையும் வீ.இராதாகிருஷ்ணன் எம்.பி. தலைமையில் கொண்டாடும் இந்த நிகழ்வுக்கு எனது பாராட்டுக்களை முதலில் தெரிவித்துக்கொள்கின்றேன்.

உண்மையில் கூறப்போனால் மிகவும் துன்பகரமான வாழ்க்கையை வாழ்ந்து இந்நாட்டுக்கு அந்நிய செலாவணியைத் தேடித் தந்து பலம் சேர்க்கும் மலையக மக்களுக்கு மனப்பூர்வமான நன்றிகளையும் கௌரவத்தையும் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இலங்கையில் வாழும் அனைவரும் சமமானவர்கள். சமமான முறையில் அனைத்து பிரஜைகளையும் கவனிக்க வேண்டும் என்று எமது அரசமைப்பில் கூறப்பட்டுள்ளது. அரசமைப்பில் அவ்வாறு கூறப்பட்டாலும், யதார்த்தத்தில் மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்குக் கிடைக்க வேண்டிய அந்தஸ்து, மரியாதை, பலம் இன்னமும் கிடைக்கவில்லை என்பதே எனது கருத்தாகும்.

மலையக மக்களுக்கான பிரஜாவுரிமையை முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவே வழங்கினார் என்பதை இங்கு நான் கூற விரும்புகின்றேன்.

எதிர்காலத்தில் அமையப்போகும் எமது ஆட்சியிலும் மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்கு வாழ்வதற்கான அனைத்து உரிமைகளையும் பெற்றுத் தந்தே தீருவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

விசேடமாக, மலையக மக்களை தொழிலாளர் பிரஜைகளாகவே அடையாளப்படுத்துகின்றனர். எனினும், மலையக மக்கள் தொழிலாளர்களாகவே இருக்காமல், தேயிலை உற்பத்தி துறையின் தொழில் முயற்சியாண்மை உடையவர்களாகவே நாம் அடையாளம் காண்கின்றோம்.

அதுவும் சாதாரண முயற்சியாண்மை உடையவர்களாக அன்றி, தனக்கென சொந்தமான காணியில் சிறு தேயிலை தோட்ட உரிமையாளர்களாக மாற்றும் புரட்சியை எமது ஆட்சியின் முதல் நாளில் இருந்தே ஆரம்பிப்போம். 07▶





# அதிவேக நெடுஞ்சாலைப் பணிகளில் இருந்து அதிரடிப்படையினரை நீக்குவது பற்றி ஆராய்வு

நாட்டின் அதிவேக நெடுஞ்சாலைகளில் கடமையில் ஈடுபட்டுள்ள விசேட அதிரடிப் படையினரின் பணிகள் மற்றும் அது குறித்த பிரச்சினைகள் தொடர்பிலும், அவர்களை அந்தப் பணிகளில் இருந்து நீக்குவது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

தேசியப் பாதுகாப்புத் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலொன்றின்போது இது தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது.

இலங்கை அதிவேக நெடுஞ்சாலைகளில் ஏற்படும் விபத்துக்களைக் குறைப்பதற்கும், அதன்போது செயல்படவும், குற்றங்களைத் தடுப்பதற்கும் பொலிஸ் விசேட அதிரடி படையினர் கடமையில் ஈடுபட்டுள்ளனர். அந்தப் பணிகளிலிருந்து விசேட அதிரடிப் படையினரை நீக்கி, அந்தப் பணிகளை முன்னெடுப்பதற்கான மாற்றுவழி தொடர்பில் இதன்போது ஆராயப்பட்டது.

இதற்காக முன்வைக்கப்பட்ட பல்வேறு யோசனைகள் தொடர்பில் ஆராயப்பட்டதுடன், இந்தப் பணிகளைப் பொறுப்புடன், உரிய வகையில் முன்னெடுப்பதற்கும், இதனை வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் முகாமைத்துவம் செய்யக்கூடியதுமான சரியான வேலைத்திட்டம் ஒன்றைப் பாதுகாப்பு பதவி நிலைப் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா தலைமையில் விரைவில் உருவாக்குமாறும் சாகல ரத்நாயக்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

இந்த கலந்துரையாடலில், பாதுகாப்பு பதவி நிலைப் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா, ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகள், இலங்கைப் பொலிஸ் விசேட அதிரடிப்படையின் சிரேஷ்ட அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் பங்கேற்றிருந்தனர்.





# மனைவியுடனான சண்டையில் வீட்டைக் கொளுத்திய கணவன்

(ரஸீன் ரஸ்மின்)

கணவன் – மனைவிக்கு இடையில் ஏற்பட்ட வாக்குவாதம் எல்லை மீறியதில் கோபமடைந்த கணவர் தமது வீட்டை தீ வைத்துக் கொளுத்தியுள்ளார்.

இந்த சம்பவம் நேற்று ஆ

இதன்போது, வீடு முழுமையாக தீக்கரையானதுடன் , பல இலட்சம் பெறுமதியான பொருள்கள் சேதமடைந்துள்ளன எனவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

எனினும் உயிரிழப்பு எதுவும் ஏற்படவில்லை என்றும் பொலிஸார் கூறினர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஆராச்சிக்கட்டுவப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## மலையக மக்களுக்கு...

(5ஆம் பக்கத் தொடர்ச்சி..)

லயன் அறையில் வாழ்க்கையை நடத்தி கொண்டும், குறைந்தளவிலான கல்வி மற்றும் சுகாதார வசதிகளை கொண்டும் மிகவும் கஷ்டமான துயர வாழ்க்கையை மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் நடத்தி வருகின்றனர்.

மலையக மக்களுக்கு நியாயத்தைப் பெற்றுக்கொடுப்பதற்கான காலம் உதயமாகியுள்ளது. பேசியது போதும் செயல் வடிவமே தற்போது எமக்கு அவசியமாக உள்ளது.

எமது ஆட்சியின் முதலாவது காலப்பகுதியில் காணி உரித்துரிமையை கொண்ட, பொருளாதார பலம் கொண்ட, கல்வி மற்றும் சுகாதார வசதிகளை பெற்ற, அனைத்திலும் இயலுமையை கொண்ட, கௌரவமான வாழ்க்கையை மலையக மக்களுக்குப் பெற்றுக்கொடுப்பதற்கான பயணத்தை ரணசிங்க பிரேமதாஸவின் நாமத்தின் கீழ் ஆரம்பித்து செய்து காட்டுவோம் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூற விரும்புகின்றேன்.

வீ.இராதாகிருஷ்ணன் தலைமையில் மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் 200 வருட சிறப்புமிக்க வரலாற்றைக் கொண்டாடும் இவ்வேளையில், எமது ஆட்சி வருவதற்கு முன்னர் எதிர்க்கட்சியில் இருந்துகொண்டு மலையக மக்களுக்காக மூச்சு (ஹுஸ்ம) மற்றும் பிரபஞ்சம் (சக்வல) திட்டங்களின் ஊடாக பாடசாலைகளைக் கட்டியெழுப்பி, சுகாதாரத் துறையின் பிரச்சினை தீர்த்து மலையக மக்களின் உரிமைகளைப் பலப்படுத்துவோம் என்ற உறுதியை வழங்கி எனது பேச்சை நிறைவு செய்கின்றேன்.” – என்றார்.

இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான மனோ கணேசன், சிவஞானம் சிறிதரன், எம்.வேலு குமார் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## மீண்டும் வேண்டும் பாலன் வருகை

இன்று கிறிஸ்துமஸ் தினம். பாலன் இயேசு அவதரித்த நாள்.

உலகையும், மக்களையும் மீட்க தன் குமாரனை இறைவன் உடலும் உணர்வுமாய் நம் மத்தியில் அனுப்பிய புனித நாள் இது.

மனிதமும் புனிதமும் ஒன்றிணைந்த இந்த கிறிஸ்மஸ் பிறப்பு நன்னாளிலே மனிதர்களாகிய நாம் கிறிஸ்துவின் வழியில் புனிதர்களாக வாழ சங்கற்பம் செய்து கொள்ள வேண்டும்.

பாவ இருளிலும், அடிமைத்தனத்திலும் அவலப்பட்டிருந்த மக்களுக்கு நம்பிக்கை ஒளி தருவதற்காக - உலக மக்களை மீட்பதற்காக - இறைவன் தன் குமாரனாகிய இயேசு பாலனை மனிதனாக அவதரிக்க அனுப்பி வைத்த நாள் இது. அதனால் புனிதத்தோடு மனிதன் பிறந்த நாளாகவும் இது மதிக்கப்படுகின்றது.

மனுக்குலத்தை இரட்சிக்க மனிதனாக உருவெடுத்து, அவதரித்து பூமிக்கு வந்தார் இறைகுமாரன்.

"காரிருள் சூழ்ந்த நாட்டில் மக்கள் பேரொளியைக் கண்டார்கள். காரிருளின் நிழல் சூழ்ந்துள்ள நாட்டில் குடியிருப்போர் மேல் சுடரொளி உதித்தது." (மத்தேயு 4:16)

கிறிஸ்மஸ் என்பது பகிர்தல், பரிசளித்தல், வாழ்த்துதல், ஏழை எளியோருக்கும் கைவிடப்பட்டோருக்கும் உதவுதல் போன்ற முக்கிய செயற்பாடுகளை வலியுறுத்தும் பண்டிகையாகும். அதனை வெளிப்படுத்தும் வகையிலேயே கிறிஸ்துவின் பிறப்பும் கூட முதலில் ஏழைகளான இடையர்களுக்கே அறிவிக்கப்பட்டது.

இயேசு பிறப்பு செய்தி ஏழ்மையான வாழ்க்கை வாழ்ந்த இடையர்களுக்கு முதலில் அறிவிக்கப்பட்ட போது அவர்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. கஷ்டப்படும் தமது வாழ்விற்கு விடிவு கிடைக்காதா என்ற எதிர்பார்ப்பில் வாழ்ந்து கொண்டிருந்த இடையர்களுக்கு இயேசுவின் பிறப்பு மகிழ்ச்சியையும் நம்பிக்கையையும் புதிய எதிர்பார்ப்பையும் கொடுக்கத் தவறவில்லை.

அத்தகைய ஓர் எதிர்பார்ப்போடுதான் முழு உலகமுமே இன்று பரிதவிப்போடு காதிருக்கின்றது.

பாவிகளை மீட்கவே பாலன் இயேசு ஏழையாக பாரில் அவதரித்தார் என்ற உண்மையை உலகம் உணர வேண்டும். வருத்தப்பட்டுச் சுமப்பவர்களுக்கு அவரே இளைப்பாறுதலைத் தருகின்றார்.

"உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக" (லூக்கா 2:14) என்று வானதூதர்கள் பாடியது, உள அமைதி தொடங்கி உலக அமைதி வரைக்கும் என்பதாகும். அமைதியை உருவாக்குவதே கிறிஸ்து பிறப்பின் நற்செய்தி என்பது கவனிக்கப்பட வேண்டும். அதனால்தான் அவரை சமாதானப் பிரபு என்றும் அழைக்கின்றோம்.

அவர் காட்டிய சமாதானத்தைத்தான் இன்று காணாத பொருளாக உலகம் தேடிக் காத்துப் பரிதவிப்போடு நிற்கின்றது.

பாலன் இயேசு உலகத்தவராகிய நமக்குத் தன்னுடன் எடுத்து வந்து தந்த அந்த அன்பும், அமைதியும், சமாதானமும், சுபீட்சமும் எங்கே? இலங்கை நாடு மட்டுமல்ல, முழு உலகமுமே அதனைத்தான் தொலைத்து விட்டுத் தேடிக்கொண்டிருக்கின்றது.

இந்தத் தேடலைத்தான் "இனவாதம், மதவாதம், போர், இறப்பு, பசி, பட்டினி என நீண்டு கொண்டே செல்லும் காரிருளின் ஆட்சிக்கு பாலக இயேசுவின் பிறப்பு நிச்சயமாக முற்றுப்புள்ளி கொடுக்கும் என்பதை நம்புவோம்" என்று யாழ்ப்பாணம் மறைமாவட்ட ஆயர்அருட்கலாநிதிஜஸ்ரின்பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தன் கிறிஸ்மஸ் வாழ்த்து செய்தியில் - குறிப்பாக நம்பிக்கை ஊட்டும் விதத்தில் - தெரிவித்துள்ளார்.

அந்த உயரிய அமைதியையும், சமாதானத்தையும், எல்லோருக்கும் மதிப்பார்ந்த வாழ்வையும், அன்பின் ஆட்சியையும் வழங்கி, மனித சமுதாயத்துக்கு இளைப்பாறுதலைத் தர பாலன் பிறப்பு இங்கு இப்போதும் அவசியமாகின்றது.

# பேரிடரில் இருந்து தமிழகம் மீண்டெழ மத்திய அரசு உதவும் என மோடி உறுதி

## - தமிழக முதல்வர் ஸ்டாலின் தகவல்



மிக்ஜாம் புயல் பாதிப்பு மற்றும் தென் மாவட்ட வெள்ள பாதிப்பு என அடுத்தடுத்த இரண்டு இயற்கை பேரிடரில் இருந்து தமிழகம் மீண்டெழ மத்திய அரசு உதவும் என பிரதமர் மோடி உறுதி அளித்துள்ளார் என முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் முதல்வர் ஸ்டாலின் தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

“மிக்ஜாம் புயல் பாதிப்பு ஏற்பட்ட உடன் தென்மாவட்டங்களில் ஏற்பட்ட வரலாறு காணாத பெருவெள்ளம் குறித்துக் கேட்டறிய பிரதமர் நரேந்திர மோடி என்னை அழைத்திருந்தார்.

கடும் நிதி நெருக்கடிக்கிடையே மாநில அரசு மேற்கொண்டு வரும் பெரும் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் குறித்து அவரிடம் விளக்கிக் கூறி, மத்திய அரசிடம் இருந்து உடனடி நிதி உதவியைக் கோரினேன்.

இந்த இரட்டைப் பேரிடரில் இருந்து தமிழகம் மீண்டெழ மத்திய அரசு உதவும் என உறுதியளித்த பிரதமர், வெள்ளப் பாதிப்பை மதிப்பிட மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனை நியமித்திருப்பதாகவும் தெரிவித்தார்” என குறிப்பிட்டுள்ளார்.

கடந்த வாரம் மிக்ஜாம் புயல் பாதிப்பு மற்றும் தென்மாவட்ட வெள்ள பாதிப்பு குறித்து பிரதமர் மோடியை டில்லியில் சந்தித்து, விளக்கி இருந்தார் முதல்வர் ஸ்டாலின். அதோடு நிவாரண பணி களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யுமாறும் கோரி இருந்தார்.

# நாடு சுதந்திரம் அடைந்தபோதே பயங்கரவாதம் தொடங்கிவிட்டது

## - வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவிப்பு

நாடு சுதந்திரம் அடைந்தபோதே பயங்கரவாதம் தொடங்கிவிட்டது என்று வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

தேசிய பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் மூன்றாம் ஆண்டு பட்டமளிப்பு விழாவில் பங்கேற்ற அவர் பின்னர் செய்தியாளர்களிடம் பேசினார்.

அப்போது அவர் தெரிவிக்கையில்,

”நாடு சுதந்திரம் அடைந்தபோதே பயங்கரவாதம் தொடங்கிவிட்டது. பாகிஸ்தானில் இருந்து பலர் எல்லை தாண்டி இந்தியாவுக்குள் ஊடுருவத் தொடங்கினார்கள்.

மும்பை பயங்கரவாத தாக்குதல்தான் இதில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது. மும்பையில் நடைபெற்ற 26/11 தாக்குதலுக்கு முன்பு வரை மக்கள் குழப்பமான மனநிலையில்தான் இருந்தார்கள்.

தற்போது நாட்டுக்குத் தேவை, பதில் தாக்குதல்கள்தான். இதுதான் தற்போது நாட்டின் எண்ணமாக உள்ளது. யாராவது எல்லைத் தாண்டி ஊடுருவினால் நாம் பதில் தாக்குதல் நடத்த வேண்டும். பயங்கரவாதம் நாட்டுக்கு இன்னமும் குறிப்பிடத்தக்க சவாலாக விளங்கிக் கொண்டிருக்கிறது. இதை முறியடிக்க




வேண்டுமானால், தீவிரமான பதில் தாக்குதலை அளிக்க வேண்டும்.

பாகிஸ்தான் உருவானதில் இருந்து அந்த நாட்டுக்கும் இந்தியாவுக்குமான உறவு இயல்பு நிலையில் இல்லை. எல்லைத் தாண்டிய பயங்கரவாதம் தொடர்பான நமது கவலைகளை நாம் தொடர்ந்து வெளிப்படுத்தி வருகிறோம். பயங்கரவாதமும் பேச்சுவார்த்தையும் இணைந்திருக்க முடியாது என நாம் கூறி வருகிறோம்.

அமெரிக்காவில் இந்து கோயில் இடிக்கப்பட்டிருப்பது கவலை அளிக்கிறது. இந்தியாவுக்கு எதிரான பயங்கரவாதிகளுக்கும் பிரிவினைவாதிகளுக்கும் வெளிநாடுகள் இடம் கொடுக்கக்கூடாது.

இது குறித்து அமெரிக்காவில் உள்ள நமது தூதரகம் அந்நாட்டு அரசிடமும் காவல் துறையிடமும் புகார் அளித்துள்ளது. இது குறித்து விசாரணை நடத்தப்படும் என நம்புகிறேன்.” என்று தெரிவித்தார்.

# இந்தோனேசியாவில் ஏற்பட்ட வெடி விபத்தில் 13 பேர் பலி!





இந்தோனேசியாவில் ஏற்பட்ட பயங்கர வெடி விபத்தில் 13 பேர் உயிரிழந்துள்ளனர். 38 பேர் படுகாயம் அடைந்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்தோனேசியாவின் சுலவேசி தீவில் உள்ள நிக்கல் தொழிற்சாலையிலேயே நேற்று அதிகாலை இந்த வெடிவிபத்து ஏற்ப்பட்டுள்ளது.

இந்தோனேசியாவின் சுலவேசி தீவில் தனியார் தொழிற்சாலை வளாகம் ஒன்றில் நிக்கல் கனிமம் உருக்கும் ஆலை ஒன்றும் செயல்பட்டு வந்ததுள்ளது.

இந்த நிக்கல் தொழிற்சாலையில் நேற்று அதிகாலை தொழிலாளர்கள் சிலர் புகைப்போக்கிகளை சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்டிருந்த போது எதிர்பாராத விதமாக வெடி விபத்து ஏற்பட்டு அடுத்தடுத்த புகை போக்கிகளிலும் வெடி விபத்து நிகழ்ந்தது.

இது குறித்து தகவல் அறிந்ததும் உடனடியாக மீட்பு படையினர் விரைந்து வந்து தீயை கட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

எனினும் தீயில் சிக்குண்டு 13 தொழிலாளர்கள் உயிரிழந்துள்ளனர். 38 இற்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்துள்ளனர்.

உயிரிழந்த 13 பேரில் 7 பேர் இந்தோனேசியாவை சேர்ந்தவர்கள். 6 பேர் சீனாவை சேர்ந்தவர்கள் ஆவர்.



இந்த விபத்திற்கான காரணம் என்ன என்பது குறித்து முழுமையாக தெரியவராத நிலையில், தூய்மை பணியின் போது ஏற்பட்ட தீ விபத்தால் இந்த வெடி விபத்து நிகழ்ந்திருக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நத்தார் கொண்டாட்டங்கள் பெத்லகேம் நகரில் இரத்து!

இஸ்ரேல் – ஹமாஸ் போர் காரணமாக பெத்லகேம் நகரில் இந்த வருட நத்தார் கொண்டாட்டங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளன என தகவல் வெளியாகியுள்ளது.

காசா மீதான தாக்குதல் தொடர்ந்து வருகின்ற நிலையில் கொண்டாட்டங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளன என கூறப்படுகிறது.

இயேசு கிறிஸ்து பிறந்த நகரமான பெத்லகேம் இஸ்ரேல் மேற்குக் கரையில் அமைந்துள்ளது. பொதுவாக டிசம்பர் பிற்பகுதியில் யாத்ரீகர்கள் மற்றும் பிற கொண்டாட்டக்காரர்களால் நிரம்பி வழியும்.

நத்தார் நேரத்தில் பெத்லஹேமுக்கு வழக்கமாக தினமும் 6 ஆயிரம் பார்வையாளர்கள் வருவார்கள்.

இந்த ஒரு மாதத்தில் ஆயிரத்துக்கும் குறைவாக குறைந்ததால் தேவாலயம்



வெற்றிடமாக உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

போரினால் பொது கொண்டாட்டங்களை ரத்து செய்ய கடந்த மாதம் ஒன்று கூடிய பல பலஸ்தீனிய கிறிஸ்தவ தலைவர்கள் சேர்ந்து இந்த முடிவை எடுத்துள்ளனர் என கூறப்பட்டுள்ளது.

கொவிட் தொற்று காரணமாக இரண்டு ஆண்டுகள் குறைக்கப்பட்ட பண்டிகைகளைத் தொடர்ந்து, 2022 இல் பெத்லஹேகத்தில் நத்தார் கொண்டாடப்பட்டது.

இந்த நிலையில் இவ் வருட நத்தார் கொண்டாடங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளன.

அத்துடன், பெத்லகேமில் உள்ள கிறிஸ்தவ தலைவர்கள், இஸ்ரேல் மீது ஹமாஸ் நடத்திய திடீர் பயங்கரவாதத் தாக்குதலைக் கண்டித்துள்ளனர்.

“ஹமாஸின் கொடூரமான தாக்குதல் களை நாங்கள் கண்டிக்கிறோம், இது கிட்டத்தட்ட 1,400 இஸ்ரேலியர்கள் மற்றும் பிற நாடுகளின் குடிமக்களின் உயிரிழப்புகளை ஏற்படுத்தியது, மேலும் பணயக் கைதிகளாக உள்ள அனைத்து பொதுமக்களையும் உடனடியாக விடுவிக்க நாங்கள் அழைப்பு விடுக்கிறோம்” என்று பெத்லஹேம் மதகுருமார்கள் குழு ஜோ பைடனுக்கு கடிதம் எழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# நத்தார் பண்டிகையினை முன்னிட்டு 1,004 கைதிகள் இன்று விடுதலை!

நத்தார் பண்டிகையினை முன்னிட்டு 1,004 சிறைக்கைதிகள் இன்று விசேட பொதுமன்னிப்பில் விடுவிக்கப்படவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, நாடளாவிய ரீதியில் உள்ள 29 சிறைச்சாலைகளில் உள்ள 989 ஆண்களுக்கும், 15 பெண்களுக்கும் ஜனாதிபதியினால் இவ்வாறு விசேட பொதுமன்னிப்பு அளிக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களப் பேச்சாளர் காமினி பி. செனரத் தெரிவித்துள்ளார்.

இதன்படி, சிறு குற்றங்களுக்காக தண்டனை அனுபவித்து வருபவர்கள் மற்றும் தண்டப்பணம் செலுத்த தவறியமையினால் சிறையில் உள்ள கைதிகள் இவ்வாறு பொதுமன்னிப்பின் அடிப்படையில் விடுவிக்கப்படவுள்ளனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ரயில் தடம்புரண்டால் தண்டவாளங்களை விரைவாக புனரமைப்பதற்கு விசேட குழு



ரயில்கள் தடம்புரளும் சந்தர்ப்பங்களில், தண்டவாளங்களை விரைவாகப் புனரமைப்பதற்கு விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

பயணிகளின் நலன் கருதி இந்த வசதிகள் ஏற்படுத்தப்படவுள்ளன என ரயில்வே ஊடகப் பேச்சாளர் என்.ஜே.இதிபொலகே தெரிவித்துள்ளார்.

கடந்த சில நாள்களாக பெய்த மழை மற்றும் மண்சரிவு காரணமாக மலையக ரயில் மார்க்கத்தில் ரயில்கள் பல தடம்புரண்டுள்ளன என அவர் சுட்டிக்காட்டினார்.

# எரிபொருளுக்குப் பணம் செலுத்தாமல் சென்ற ரஷ்யப் பிரஜை ஹபராதுவ பொலிஸாரால் கைது

ஹபராதுவ பிரதேசத்திலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையமொன்றில் தனது வாகனத்துக்கு எரிபொருளைப் பெற்றுக்கொண்டு பணம் செலுத்தாமல் தப்பிச் சென்றார் எனக் கூறப்படும் ரஷ்யப் பிரஜையொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

39 வயதான இந்த ரஷ்யப் பிரஜை, 5 நாள்களுக்கு முன்னர் அந்த எரிபொருள் நிரப்பு நிலையத்திலிருந்து எரிபொருளைப் பெற்றுப் பணம் செலுத்தாமல் சென்றுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், சம்பவம் தொடர்பில் ஹபராதுவ பொலிஸார் முன்னெடுத்த விசாரணைகளில் அந்தச் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.








# மருந்தின் ஒவ்வாமை காரணமாகவே யாழ். பல்கலை மாணவி உயிரிழப்பு

டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டவருக்குச் செலுத்தப்பட்ட மருந்தின் ஒவ்வாமை காரணமாகவே யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவி உயிரிழந்துள்ளார் என மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீடத்தில் இறுதியாண்டில் கல்வி கற்கும் குணரத்தினம் சுபீனா என்ற 25 வயதான மாணவி நேற்று முன்தினம் உயிரிழந்தார்.

காய்ச்சல் காரணமாக தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட மாணவி, மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்நிலையில் குறித்த மாணவி நேற்றுமுன்தினம் உயிரிழந்தார்.

உயிரிழப்புத் தொடர்பான உடற்கூற்று பரிசோதனை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நேற்று இடம்பெற்றது.

இதன்போது டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்ட இந்த மாணவிக்கு செலுத்தப்பட்ட மருந்தின் ஒவ்வாமை காரணமாகவே உயிரிழப்பு இடம்பெற்றது என மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் உயிரிழந்த மாணவியின் உடற்கூற்றுப் பகுதி மேலதிக பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது.

பரிசோதனைக்கு பின்னர் உயிரிழந்த மாணவியின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.



# அஸ்வெசும பயனாளர்களை அதிகரிப்பதற்குத் தீர்மானம்

அஸ்வெசும நலன்புரித் திட்டத்துக்கான உதவிகளைப் பெறும் குடும்பங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

தெரணியகல பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்படி,அஸ்வெசும நலன்புரி திட்டத்துக்கான உதவிகளைப் பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை 20 லட்சத்தில் இருந்து 24 லட்சமாக அதிகரிக்கப்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, அஸ்வெசும நிதி திட்டத்தின் டிசம்பர் மாதத்துக்கான கொடுப்பனவுகள் வைப்பிடலிடப்பட்டுள்ளன.

இதற்காக 8,793 மில்லியன் ரூபா வங்கிகளுக்கு மாற்றப்பட்டுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.



# அமைச்சர் டிரான் அலஸ் சாபத்துக்குள்ளாவார் அவரின் குண்டர் செயற்பாட்டுக்கு அஞ்சோம்!

## கத்தோலிக்கத் திருச்சபையின் அருட்தந்தை ஜூட் பெர்னாண்டோ உறுதி



கத்தோலிக்க சபை மற்றும் பேராயர் மீது அவதூறு பரப்பும் அமைச்சர் டிரான் அலஸின் செயற்பாடுகள் மதங்களுக்கிடையில் முரண்பாடுகளை தோற்றுவிப்பனவாகவும், மதத்தை நிந்திப்பனவாகவும் உள்ளன. இவ்வாறான செயற்பாடுகள் அவரைச் சாபத்துக்குள்ளாக்கும். அரசாங்கத்தின் பிரதான அமைச்சரான டிரான் அலஸ் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஒப்பந்தத்தை செயற்படுத்துகின்றாரா என்ற சந்தேகம் நிலவுகிறது. அமைச்சர் டிரான் அலஸ் அவரது குண்டர் செயற்பாட்டை வேறு நபர்களிடம் காண்பிக்கலாம். ஆனால், கத்தோலிக்க சபையைச் சேர்ந்த நாம் அதற்கு ஒரு போதும் அஞ்சப் போவதில்லை.

– பேராயர் இல்லத்தின் மக்கள் தொடர்பு ஒருங்கிணைப்பு பிரிவின் பணிப்பாளர் அருட்தந்தை ஜூட் பெர்னாண்டோ இவ்வாறு தெரிவித்திருக்கின்றார்.

அருட்தந்தை சிறில் காமினி தொடர்புடைய விபத்துக் குறித்துப் பேராயருக்கு நெருங்கிய ஒருவர் தம்முடன் தொலைபேசியில் உரையாடினார் என அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளமை முற்றிலும் பொய்யாகும் என்றும்அருட்தந்தைஜூட்பெர்னாண்டோ தெரிவித்திருக்கின்றார்

கடந்த வியாழக்கிழமை ஜனாதிபதி ஊடக மையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்த கருத்துக்களுக்கு பதிலளிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

அருட்தந்தை சிறில் காமினியால் இடம்பெற்ற விபத்தின்போது, பதில் பொலிஸ்மா அதிபருடன் தொலைபேசியில் உரையாடினார் எனவும், பிணை வழங்கியமைக்காக நன்றி தெரிவித்தார் எனவும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்திருக்கின்றார். அது முற்றிலும் பொய்யானதொரு விடயமாகும்.

விபத்து இடம்பெற்று அருட்தந்தை சிறில் காமினி பொலிஸாரால் விடுவிக்கப்பட்ட மறுநாளே தான் இந்த சம்பவம் தொடர்பில் தெரிந்துகொண்டார் எனப் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை மிகவும் பொறுப்புடன் தெரிவித்துள்ளார். அரசாங்கத்திடமோ அல்லது பொலிஸாரிடமோ தனது பெயரைக் கூறி சிறப்புரிமைகளைப் பெற்றுக் கொள்ளக்கூடியளவு நெருக்கமானவர்கள் எவரும் தனக்கு அருகில் இல்லை என்றும், அவ்வாறு எவரும் செயற்பட்டிருப்பார்களானால், அது தனக்குப் பெரும் ஆச்சரியம் அளிப்பதாகவும் பேராயர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, அமைச்சரால் பேராயரைத் தொடர்புபடுத்தி கூறப்பட்ட விடயங்கள் முற்றிலும் பொய்யானவை என்பதை நாம் பொறுப்புடன் கூறிக்கொள்கின்றோம். அத்தோடு அருட்தந்தை சிறில் காமினியும் இவ்வாறு ஒருவர் பதில் பொலிஸ்மா அதிபரிடம் பேசிய விடயத்தை அறிந்திருக்கவில்லை. எனவே இவ்வாறு அப்பட்டமான பொய்களைக் கூற வேண்டாம் என்று அமைச்சர் டிரான் அலஸிடம் கேட்டுக்கொள்வதோடு, மாறாக அமைச்சர் கூறுவது உண்மையெனில், அதனை சாட்சியங்களுடன் நிரூபிக்குமாறும் சவால் விடுக்கின்றோம்.

அமைச்சர் டிரான் அலஸின் செயற்பாடுகளை நாம் முற்றாக நிராகரிக்கின்றோம். இவர் அண்மைய நாள்களாக கத்தோலிக்க சபைக்கும், பேராயர் மீதும் அவதூறுகளை ஏற்படுத்தும் வகையில் செயற்படுகின்றமை கவலைக்குரியதாகும். இவ்வாறான செயற்பாடுகளை நிறுத்திக்கொள்ளுமாறு அமைச்சரை வலியுறுத்துகின்றோம். இவ்வாறு கத்தோலிக்க சபை மற்றும் பேராயர் மீது அவதூறு பரப்பும் செயற்பாடுகளானது மதங்களுக்கிடையில் முரண்பாடுகளை தோற்றுவிப்பனவாகவும், மதத்தை நிந்திப்பனவாகவும் உள்ளன.

இவ்வாறான செயற்பாடுகள் அவரை சாபத்துக்குள்ளாக்கும். அரசாங்கத்தின் பிரதான அமைச்சரான டிரான் அலஸ் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஒப்பந்தத்தை செயற்படுத்துகின்றாரா என்ற சந்தேகம் நிலவுகிறது. அமைச்சர் டிரான் அலஸ் அவரது குண்டர் செயற்பாட்டை வேறு நபர்களிடம் காண்பிக்கலாம். ஆனால், கத்தோலிக்க சபையைச் சேர்ந்த நாம் அதற்கு ஒரு போதும் அஞ்சப் போவதில்லை. – என்றார்.




# ஜனாதிபதித் தேர்தலில் குதிக்க மைத்திரிபால சிறிசேன தயாராம்

கட்சியின் நிறைவேற்றுக்குழு தீர்மானித்தால் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்குத் தான் தயாராக உள்ளார் என ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நாடு வங்குரோத்தடைந்தமைக்கு யார் காரணம் என்பதற்கு நீதிமன்றம் தெளிவான பெயர்ப் பட்டியலை வெளியிட்டுள்ளது. அவ்வாறிருகையில் அவர்களின் பின்னால் செல்வதா அல்லது நாட்டை சரியான பாதையில் கொண்டு செல்லும் சுதந்திர கட்சியுடன் இணைந்து செயற்படுவதா என்பதை மக்கள் தீர்மானிக்க வேண்டும்.

உத்தேச ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு பொருத்தமான வேட்பாளரை சுதந்திர கட்சி தக்க சமயத்தில் களமிறக்கும். கட்சியின் நிறைவேற்றுக்குழுவே அந்தத் தீர்மானத்தை எடுக்கும். அதற்கமைய நிறைவேற்றுக் குழு என்னை வேட்பாளராகத் தெரிவு செய்தால், களமிறங்குவதற்கு நான் தயாராகவே உள்ளேன் என்றும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இது தொடர்பில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திலங்க சுமதிபால தெரிவிக்கையில், சுதந்திர கட்சியின் மத்திய குழு உறுப்பினர்களில் பெரும்பாலானோரின் நிலைப்பாடு, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தேர்தலில் களமிறங்க வேண்டும் என்பதாகவே காணப்படுகிறது என்றார்.

# யாழ். ஆஸ்பத்திரியில் மேலதிகமாக 2 விடுதிகள் டெங்கு நோயாளருக்கு

## தற்சமயம் 114 பேர் தங்கியிருந்து சிகிச்சை

யாழ்ப்பாண மாவட்டத்தில் டெங்கு தொற்றுக்குள்ளான 114 பேர் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டு விடுதிகளில் தங்க வைக்கப்பட்டுள்ளார்கள் என யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலை பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்,

யாழ் மாவட்டத்தில் டெங்கு தொற்று நிலைமை தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போது மேற்கண்டவாறு அவர் குறிப்பிட்டார்.

யாழ். மாவட்டத்தில் டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்துள்ள நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் தற்போது 114 பேர் டெங்கு தொற்றுக் குள்ளாகி சிகிச்சைக்காக சேர்க்கப் பட்டுள்ளார்கள்.

ஏற்கனவே இருந்த விடுதிகளில் இடப்பற்றாக்குறை காணப்பட்டதன் காரணமாக மேலதிகமாக 2 காய்ச்சல் விடுதிகளை இந்த டெங்கு நோயாளர்களுக்கென புதிதாக ஆரம்பித்திருக் கின்றோம்.

டெங்குத் தொற்றுக்குள்ளாகி விடுதிகளில் அனுமதிக்கப்பட்டுள்ள 114 பேரில் அரை வாசிக்கும் மேற்பட்டோர் சாதாரண காய்ச்சலுடன் விடுதிகளில் அனுமதிக்கப் பட்டுள்ளார்கள். அதேபோல அரை வாசிக்கும் மேற்பட்டோருக்கு தாதியரின் கண்காணிப்பில் அவர்களுக்கு சிகிச்சை யளிக்கப்படுகிறது.

மேலும் சுகாதார அமைச்சினால் ஆலோசனைகள் வழங்கப்பட்டு டெங்கு தொற்றுக்குள்ளானோக்குரிய மருந்து வகைகளும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை காரணமாக விடுதிகளில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்களுக்கான சிகிச்சைகள் உரிய முறையில் வழங்கப்படுகின்றது எனவும் தெரிவித்தார்.



# தீர்வை வழங்குவதில் இருந்து ஆட்சியாளர்கள் விலகி நிற்கவே முடியாது என்கிறார் சம்பந்தன்

இனப் பிரச்சினைக்கான தீர்வை வழங்குவதிலிருந்து ஆட்சியாளர்கள் விலகி நிற்கவே முடியாது என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

அத்துடன் தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் அதிகாரப்பகிர்வை நோக்கிய செயற்பாட்டில் தொடர்ந்தும் பாடுபட்டு வருகின்றார் எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும், வடக்கு, கிழக்கு பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பின் போது, புதிய நாடாளுமன்றத்தில் புதிய அரசமைப்பின் ஊடாக இனப் பிரச்சினைக்கான தீர்வு, அதிகாரப் பகிர்வு விடயங்களை ஒரு வருட கால அவகாசத்துக்குள் முன்னெடுப்பதாக தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், அது குறித்து கருத்து வெளியிடும்போதே இரா.சம்பந்தன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் –

தமிழ் மக்கள் நீண்டகாலமாக இனப் பிரச்சினைக்கான நிரந்தரமான தீர்வொன்றை வலியுறுத்தி வருகிறார்கள். அவர்கள் அதற்காக தொடர்ச்சியாக தமது ஆணையை வழங்கியும் வருகின்றார்கள்.

அந்த வகையில், ஆட்சியாளர்கள் இனப் பிரச்சினைக்கான தீர்வினை தொடர்ந்தும் காலம் கடத்திச் செல்ல முடியாது. அவர்கள் தீர்வினை வழங்குவதிலிருந்து விலகி நிற்கவே முடியாது.

தமிழ் மக்கள் தங்களுடைய கருமங்களை தாங்களே ஆற்றும் வகையில் சுய நிர்ணய அடிப்படையில், சமஷ்டி அடிப்படையில், அதிகாரங்கள் மீளப் பெற முடியாத வகையில் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். அந்த இலக்கை அடைவது நோக்கி நாம் தொடர்ச்சியாக செயற்பட்டு வருகின்றோம். – என்றார்.

# போதைப்பொருள், பாதாள உலகத்தினருக்கு முழுமையாகவே முற்றுப்புள்ளி வைக்கப்படும்!

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் உறுதி

“போதைப்பொருள் பயன்பாடு மற்றும் பாதாள உலகத்தினரின் செயற்பாடுகள் ஆகியவற்றுக்கு எதிர்வரும் ஜூன் மாதத்துகுள் முழுமையாக முற்றுப்புள்ளி வைப்பதை இலக்காக கொண்டுள்ளோம். இந்தச் சவாலான பயணத்தில் அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும்”

– இவ்வாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

ஐந்து நாள்களாக முன்னெடுக்கப்படுகின்ற யுக்திய போதைப்பொருள் சுற்றிவளைப்புக்கள் மற்றும் பாதாள உலக குழுவினருக்கு எதிரான நடவடிக்கைகள் தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

“நாட்டை ஆக்கிரமித்துள்ள போதைப்பொருள் வர்த்தகம், பாவனை மற்றும் பாதாள உலகக்குழுவினர் ஆகியோருக்கு எதிரான நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. பொலிஸார் உள்ளிட்ட பொதுமக்கள், பாதுகாப்புத் துறையினர் 24மணிநேரமும் வழிப்புடன் தீவிரமான செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளனர்.

இந்தச் செயற்பாட்டிற்கு பொதுமக்கள் உட்பட அனைத்து தரப்பினரும் முழுமையான ஒத்துழைப்புக்களையும் வழங்க வேண்டும் என்பது எமது எதிர்பார்ப்பாகும். அவ்வாறான ஒத்துழைப்புக்கள் வழங்கப்படுவதன் மூலமாக போதைப்பொருளற்ற சமூகத்தைக் கொண்ட நாடொன்றை உருவாக்க முடியும் என்ற நம்பிக்கை எமக்குள்ளது.

இந்தச் செயற்றிட்டத்துக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முழுமையான ஆதரவை அளித்துள்ளார். அத்துடன், பாதுகாப்புப் படையினரும் பாரியளவில் ஒத்துழைப்புக்களை வழங்குகின்றார்கள். விசேடமாகக் கடல்மார்க்கமாக கொண்டுவரப்படுகின்ற போதைப்பொருள் கடத்தல்களைத் தடுப்பதற்கு



விசேட நடவடிக்கைகளைக் கடற்படையினர் ஆரம்பித்துள்ளனர்.

இவ்வாறான நிலையில் போதைப்பொருள் கடத்தல்கள், விநியோகம், பாவனை உள்ளிட்டவற்றுடன் தொடர்புடையவர்கள் மீதும் சட்டவிரோதமான செயற்பாடுகளில் ஈடுபடும் பாதாள உலகக்குழுவினர் மீதும் எந்தவிதமான தயவுமின்றி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்பதில் மாற்றமில்லை.”– என்றார்.



# நாம் பரிசுத்தமாய் வாழ்ந்திட இயேசு மண்ணகம் வந்தார்!

பாலன் பிறப்பால் உலகம் பெற்ற உன்னத மீட்புத் திருநாளே கிறிஸ்துமஸ். எனவே கொண்டாடி மகிழ்ந்து நாமோ பரமன் பிறப்பை பாருக்குச் சொல்லி எல்லோரும் ஒன்றாய் இணைந்து இனிதே பாடிப் போற்றிடுவோம்.

நம்மீட்பர் இயேசு சர்வவல்லவர், தன்னிகரில்லாத் தலைவன், எளிமையின் உருவெடுத்த ஏற்றமிகு அரசர், அன்பின் மேலீட்டால் அவரோ அடிமையின் கோலமே பூண்டு நல்கினார். நமக்குப் புதுவாழ்வு கொடுத்தார்.

அத்தகு புனிதநாளே கிறிஸ்து பிறப்பின் மாட்சிமிகு நன்னாள்!

எனவே, நாமும் புனிதப் பண்டிகையைக் கொண்டாடியே மகிழும் இந்நாளில் புது இதயம் பெற்றுப் பூரிப்புடன் பாடல்கள் பாடித் துதித்துப் பரமனைப் போற்றிப் புகழ்ந்து உவகை பொங்கிடவே எம் பெருமான் இயேசுவைப் போற்றிப் பாடுவோம்!

அவரின் புகழை இப்பாரினில் பறைசாற்றி, பரமன் இயேசுவே உயிர்தரும் ஒப்பற்ற தெய்வம் என்றே நாமும் புகழ்ந்துபாடி அவரின் சாட்சியாளர்களாய் வாழ்வதே கிறிஸ்துமஸ் பிறப்பு உணர்த்தும் மாபெரும் நற்செய்தி என்பதை இதயத்தில் ஏற்போம்!

இதை மனதில் ஏற்று நாமோ எல்லாரும் இன்புற்று வாழ்ந்திடப் பகிர்வோம். பரிவுப் பொருள்களைத் தந்தே உவகையூட்டும் நிக்கோலஸ் தாத்தாவைப் போன்று அனைவரும் மகிழ்ச்சி அடைந்திட அள்ளிக் கொடுப்போம்!

அப்போது, நமது கிறிஸ்மஸ் விழாவானது அர்த்தமுள்ளதாய் அமைதி நல்கிடும் தூதர்களின் வாழ்த்தொலி நமது உள்ளத்தில் ஒலித்திட பரிசுத்த தேவன் நம் இயேசு பாலகன் என்றே பாடித் துதித்து நானிலம் அமைதி பெற்றிட அன்பர் இயேசுவிடம் செபித்து அன்புமிகு சமுதாயம் உருவாகிட உருக்கமாய் மன்றாடி இதயம் மகிழ உறவுகள் மலர்ந்திட பாலகன் இயேசுவிடத்து கொஞ்சும் மொழியில் உறவாடி அவரின் பிள்ளைகளாய் அகிலமதில் வாழ்ந்திட எம்பிரான் இயேசு பாலனின் நல்அருள் வேண்டுவோமே!

நமக்கு மீட்பு நல்கியே புதுப்படைப்புக்களாய் மக்கள் மனம்மாறி பரம தந்தையின் சித்தத்தை வாழ்வாக்கி பரிசுத்தமாய் வாழ்ந்திடவே எம்பெருமான் இயேசு மண்ணகம் இறங்கி வந்தார்!

அந்த நாளில் நாமோ பாலகனை வணங்கி ஆராதித்து மரியின் மைந்தனே ஆரிரோ ஆரிரோ என்று ஆர்ப்பரித்துப் பாடியே போற்றி இயேசு பாலகனை வணங்குவோம்.

விண்ணகம் விட்டு இறங்கி வந்த மீட்பரே இயேசுவே ஆரிரோ ஆரிரோ என்று ஆர்ப்பரித்துப் பாடியே அவரை போற்றி வணங்கி கிறிஸ்துமஸ் பண்டிகை வாழ்த்தினைச் சொல்லி இயேசுவைப் போற்றி அவரின் அருளை வேண்டுவோம்!



# இயேசு பிறப்பின் செய்தி நமக்கு கூறுவது...!

கிறித்தவர்கள் இயேசுவைக் கடவுளின் மகன் என்றும், கிறித்தவ விவிலியத்திலுள்ள பழைய ஏற்பாட்டில் முன்னுரைக்கப்பட்ட மெசியா என்றும் நம்புகின்றனர்.

பெத்லகேம் எனும் சிற்றூரில் தச்சர் யோசேப்புக்கும், மரியாளுக்கும் மகனாகப் பிறந்தவர் இயேசு. யோசேப்புக்கு மனைவியாக நியமிக்கப்பட்ட மரியாளின் வயிற்றில் தூய ஆவியால் நிரப்பப்பட்டு கன்னியின் மகனாய் இயேசு பிறந்தார். எனவே இயேசு கடவுளின் குமாரனாய் இவ்வுலகில் வந்தார் என்பதே நம்பிக்கையின் செய்தி.

இயேசு பிறந்தார் என்ற செய்தி இவ்வுலகில் முதன் முதலாக ஆடுகளை வயல்வெளியில் மேய்த்துக் கொண்டிருந்த மேய்ப்பர்களுக்கு இறைத் தூதரால் அறிவிக்கப்பட்டது. 'அப்பொழுது குழந்தையை முன்னணையிலே கிடத்தியிருக்கக் காண்பீர்கள்' என்பதே செய்தியாகியது. அதே வேளையில் வானத்தில் ஒரு நட்சத்திரம் தோன்றியதைக் கண்ட வான சாஸ்திரிகள், மேசியா அதாவது, இரட்சகர் பிறந்துள்ளார் என்பதை அறிந்து, ஏரோதுவின் அரச மாளிகைக்கு குழந்தையைக் காணச் சென்றனர்.

இந்தப் பிறப்பின் செய்தி நமக்கு இன்று கூறுவது என்னவென்றால் ஏழை-பணக்காரன், ஆண்டான்-அடிமை, ஆண்-பெண், வெள்ளை-கருப்பு சாதிய வேறுபாடுகள் என்றும், இனம், மொழி என்ற நிலையில் வன்முறைக் கலாசாரங்கள் நிலவி வரும் சூழலில், அனைத்து மக்களும் ஒற்றுமையுடன் வாழவும், ஒன்றாக, நிறைவாக அனைத்தையும் பகிர்ந்து வாழவும் வேண்டும் என்பதே ஆகும்.

# காரிருளின் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி பாலன் இயேசுவின் பிறப்பு வழங்கும்

## கிறிஸ்மஸ் வாழ்த்துச் செய்தியில் யாழ் ஆயர் உறுதி

இனவாதம், மதவாதம், போர், இறப்பு, பசி, பட்டினி என நீண்டு கொண்டே செல்லும் காரிருளின் ஆட்சிக்கு பாலக இயேசுவின் பிறப்பு நிச்சயமாக முற்றுப்புள்ளி கொடுக்கும் என்பதை நம்புவோம் என யாழ் மறை மாவட்ட ஆயர் அருட்கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தமது கிறிஸ்மஸ் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

"காரிருளில் நடந்து வந்த மக்கள் பேரொளியைக் கண்டார்கள. சாவின் நிழல் சூழ்ந்துள்ளோர் மேல் சுடரொளி உதித்தது."

(17ஆம் பக்கம் பார்க்க)



# நுவரெலியா நாடாளுமன்ற உறுப்பினரின் நத்தார் வாழ்த்து!



யேசு கிறிஸ்து பிறப்பான இன்று அனைவருக்கும் இன்முகத்துடன் வாழ்த்துக்களைப் பகிர்ந்து கொள்வதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன் என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நத்தார் பண்டிகையை முன்னிட்டு அவர் விடுத்துள்ள வாழ்த்து செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஏழை மக்களின் வாழ்வில் இன்பம் கிட்டவேண்டும் என்பதற்காகவே கன்னி மரியாள் வயிற்றில் ஏழ்மையின் அவதாரமாய் அவதரித்தவர் யேசு கிறிஸ்து. அவரின் பிறப்பு மிக எளிமையானது. அவரின் பிறப்பானது ஏழை மக்களின் வாழ்வில் பல மாற்றங்களை ஏற்படுத்தியது.

நாம் இன்றும் அடிப்படை உரிமைகளையும் சலுகைகளையும் பெற வேண்டிய நிலையில் இருக்கின்றோம். எமது மக்களின் அடையாளம் மற்றும் இருப்பைத் தக்கவைத்துக் கொள்ள வேண்டும்.

அரசோ, அரசியல் தொழிற்சங்கவாதிகளோ எமக்கு நன்மை செய்யவில்லை என்று குற்றம் சாட்டுவதை விடவும் எம்மை முன்னேற விடாமல் தடுத்துக் கொண்டிருக்கும் போட்டி மனப்பான்மை, வெறுப்பு, விரக்தி, பொறாமை இவை அனைத்தையும் ஓரளவாவது கைவிடுவோம்.

இன்று உலகுக்குப் புதிய வெளிச்சத்தை உருவாக்கி, ஏழை மக்களுக்காகவே அவதரித்த குழந்தை யேசு பிறந்த இந்த நாளில் நாம் உறுதி எடுத்துக் கொண்டு எமது வாழ்வில் சிறந்த மாற்றங்களைக் நோக்கி பயணிப்போம்.

எதிர்வரும் காலங்களை நாமே சிறப்பாக்கிக் கொள்ளும் மன உறுதியை நாம் பெற வேண்டுமென வாழ்த்துகிறேன்.-என்றுள்ளது.

# காரிருளின் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி பாலன் இயேசுவின் பிறப்பு வழங்கும்

(16ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒளி அல்லது பேரொளி என்பது இருளற்ற நிலையாகும். ஒளியற்ற நிலை என்பது பார்வை இழந்த நிலையாகும். பார்வையிழந்த நிலையில் ஒரு மனிதனோ மனித குலமோ பயணம் செய்ய முடியாது. எனவே தான் இறைவன், பாவ இருள் சூழ்ந்த உலகில் வாழும் மனிதருக்கு தன் மகனை ஒளியாக அனுப்பி வைக்கின்றார். பாலக இயேசுவே இந்த ஒளி. அவரின் பிறப்பே எமக்கான விடியல். அமைதியான விடியலை நோக்கி நாம் பயணம் செய்யப் பாலக இயேசு என்னும் மாபெரும் ஒளி எம் எல்லோருக்கும் கொடுக்கப்பட்டுள்ளது.

2025, யூபிலி ஆண்டை நோக்கிப் பயணம் செய்யும் திரு அவையை, பிறக்கவிருக்கும் 2024ஆம் ஆண்டை, இறைவேண்டல் ஆண்டாகப் பின்பற்ற திருத்தந்தை அழைப்பு விடுத்துள்ளார். இன்பத்திலும் துன்பத்திலும் இறைவனைப் புகழ்ந்து கொண்டு, இறைவேண்டலில் எம்மை இணைத்து நம்பிக்கையின் திருப்பயணிகளாய் நாம் நடக்க மாபெரும் ஒளியாகிய பாலக இயேசுவின் அமைதியும் ஆசீரும் மனுக்குலத்திற்கு என்றும் கிடைப்பதாக.

ரஷ்யா, உக்ரைன், இஸ்ரேல், பாலஸ்தீனம் எனப் போர் நடைபெறும் நாடுகளும், இஸ்ரேல், ஈரான், அமெரிக்கா, சீனா, வட கொரியா, தென் கொரியா எனப் போர் முறுகல் நிலையிலுள்ள நாடுகளும் காரிருள் இன்னும் இந்த உலகை கவ்விக் கொண்டே இருக்கின்றது என்பதைக் காட்டுகின்றன.

அன்று இராமாவிலே கேட்ட அழுகுரல்களை விட பல மடங்கு அதிகமான அழுகுரல் இன்று இயேசு பிறந்த தேசத்திலும் எங்கும் கேட்கின்றது. இனவாதம், மதவாதம், போர், இறப்பு, பசி, பட்டினி என நீண்டு கொண்டே செல்லும் காரிருளின் ஆட்சிக்கு பாலக இயேசுவின் பிறப்பு நிச்சயமாக முற்றுப்புள்ளி கொடுக்கும் என நாம் நம்புவோம்.

இந்த இறைவேண்டல் ஆண்டில் மனந்தளராது நம்பிக்கையோடு செபிப்போம். எனவே இந்த மகிழ்ச்சியின் நாள்களிலே பாலக இயேசுவின் அமைதியும், ஆசீரும் முழு உலகையும் நிரப்ப ஆசித்து நிற்கின்றேன். பாலகனின் ஆசீர் பிறக்கவிருக்கும் புதிய ஆண்டில் உங்கள் அனைவருக்கும் புத்துணர்ச்சியும் விடியலும் கொடுக்க ஆசித்து வாழ்த்தி நிற்கின்றேன். – என்றார்.



## ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலைக்கு

# விசாரணைக்குழு நியமிக்கப்படுமா?

பெட்ரிஸைப் போன்று ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலைக்கும் விசாரணைக்குழு நியமிக்கப்படுமா?

தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை செய்யப்பட்டு இன்றுடன் 18 வருடங்கள் நிறைவுற்றாலும் அவரது படுகொலைக்கு இன்னமும் நீதி கிடைக்கவில்லை என்பது ஒரு கவலையான விடயம்.

ஜோசப் பரராஜசிங்கம் தமிழ் மக்களின் இணைப்பாளராகவே செயற்பட்டார். அவர் 1989 ஆம் ஆண்டு முதலாவது தடவையாக நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிட்டிருந்தாலும் அதில் தோல்வியுற்றார். தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாம் தம்பிமுத்து, 1990 ஆம் ஆண்டு மே மாதம் 07 ஆம் திகதி படுகொலை செய்யப்பட்டார். அந்த இடத்துக்கு ஜோசப் பரராஜசிங்கம் நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டார். அதன்பிறகு அவருடைய சேவைகளை உணர்ந்த தமிழ் மக்கள் 1994 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்று நாடாளுமன்றம் சென்றார்.

தொடர்ந்து வந்த 2000 ஆம் ஆண்டு, 2004 ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தல்களிலும் வெற்றிபெற்றார். 2004 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் வெல்வதற்கான வாய்ப்புக்கள் இருந்தும் தோற்கடிப்பட்டார். ஜோசப் பரராஜசிங்கத்தின் தேவை உணர்ந்து நாடாளுமன்ற உறுப்பினராகத் தேசிய பட்டியல் ஊடாக நியமிக்கப்பட்டார்.

ஜோசப் பரராஜசிங்கம் 2004 ஆம் ஆண்டு தேர்தலில் ஏன் தோற்கடிக்கப்பட்டார் என்ற விடயத்தை பார்த்தோமாக இருந்தால், அவருடைய படுகொலை ஏன் நிகழ்ந்தது என்பதை அறியலாம். 2004 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 03 ஆம் திகதி தமிழர் விடுதலைப் போராட்டத்தில் மறக்க முடியாத ஓர் நாள். அதாவது விடுதலைப் புலிகள் அமைப்பில் கிழக்கில் தளபதியாக இருந்த கருணா அம்மான் தலைமையில் பிரிந்துள்ளதாக அறிவித்த நாள். இந்த நாள்களில்தான் 2004 ஆண்டுகான நாடாளுமன்றத் தேர்லும் அறிவிக்கப்பட்டிருந்தது. வேட்பாளர் தெரிவும் இடம்பெற்றிருந்தது.

2004.03.05 ஆம் திகதி மாலைநேரம் மட்டக்களப்பு காந்தி சிலை மைதானத்தில் வேட்பாளர் அறிமுகக் கூட்டம் நடைபெற்றது. இதில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்களில் ராஜன் சத்தியமூர்த்தி மற்றும் கிங்ஸிலி இராசநாயகம் ஆகியோர் கருணாவின் தலைமையின் கீழ் நாம் இயங்குவோம் என தெரிவித்த போது, ஜோசப் மட்டும் தலைவர் பிரபாகரனின் தலைமையின் கீழ், கருணாவின் வழிகாட்டலில் இயங்குவோம் என தெரிவித்திருந்தார்.

இந்தக் படுகொலைக்கான ஆரம்பப் புள்ளி இதுதான். ஜோசப் பரராஜசிங்கம் 2005 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 25 ஆம் திகதி மட்டக்களப்பு புனித மரியாள் தேவாலயத்தில் நத்தார் நள்ளிரவு ஆராதனையில் கலந்தகொண்டிருந்த போது சுட்டுக்கொல்லப்பட்டார்.

இந்தப் படுகொலை தொடர்பில் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவருமான பிள்ளையான் என்று அழைக்கப்படும் சிவனேசதுரை சந்திரகாந்தன் 2015 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 14 ஆம் திகதி கைது செய்யப்பட்டு தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில், 24.11.2020 ஆம் திகதி பிணையில் விடுதலை செய்யப்பட்டார். அவர் 13.01.2021 குறித்த வழகில் இருந்து முழுமையாக விடுதலை செய்யப்பட்டார்.

2005ஆம் ஆண்டு படுகொலைச் சம்பவம் நடைபெற்றிருந்தாலும் பத்து வருடங்களின் பின்னர் மைத்திரி – ரணில் நல்லாட்சியில்தான் இந்தப் படுகொலைக்கு நியாயம் கிடைக்கும் என்ற நிலையில் பிள்ளையான் உட்பட 05 பிரதிவாதிகளும் கைது செய்யப்பட்டனர். அதன் பிறகு கோட்டாபாய ஆட்சியில் அவர்கள் அனைவரும் விடுவிக்கப்பட்டார்கள்.

இந்த விடுதலையானது எவ்வாறு இடம்பெற்றது என்று அண்மையில் சனல் 4 தொலைக்காட்சி சாட்சியத்துடன் வெளியிட்டிருந்தாலும், அதனைப் பொய் என்று இராஜாங்க அமைச்சர் சி.சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

பிள்ளையானின் ஆரம்பகால செயலாளராக மட்டுமல்ல அவரின் நிழலாகவே செயற்பட்ட ஆசாத் மௌலானா என்பவரின் வாக்கு மூலத்தில் இந்தச்

(19ஆம் பக்கம் பார்க்க)



# விசாரணைக்குழு நியமிக்கப்படுமா?

(18ஆம் பக்கத் தொடர்ச்சி)

சாட்சியம் வெளியாகி இருந்தது. நாட்டில் ஒரு ஆட்சி அதிகாரத்தை மாற்றுவதற்காகவே ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் நடைபெற்றது எனவும் அதற்கான கைமாறாகவே பிள்ளையான் விடுதலை செய்யப்பட்டார் என்றும் அவர் அந்தச் செவ்வியில் தெரிவித்திருந்தார்.

அதில் ஈஸ்டர் குண்டுத் தாக்குதலுக்கு எவ்வாறு திட்டம் போட்டார்கள் எனவும் சாட்சிகள் வலுவானதாக இருந்தும் பிள்ளையானை விடுதலை செய்ய முடியாமல் கோட்டாபாய அரசு இருந்துள்ளது எனவும் அவரை விடுதலை செய்ய எவ்வாறெல்லாம் தில்லுமுல்லுகள் இடம்பெற்றன என்பதையெல்லாம் அவருடைய சாட்சியத்தில் மிகத்தெளிவாக தெரிவித்துள்ளார். அந்த சாட்சியத்தில் வருகின்ற அனைத்துச் சம்பவங்களும் அடுத்தடுத்து நடைபெற்றுள்ளன.

அவற்றை எல்லாம் வைத்துப் பார்க்கும் போது யார் கொலையாளி என்பது அந்தப் புனித மரியாளுக்குத் தான் வெளிச்சம்.

ஆம், தற்போது இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எட்வர்ட் ஹென்றி பெட்ரிஸ் வழக்கை 108 ஆண்டுகளுக்குப் பின்னர் மீண்டும் விசாரணைக்கு உட்படுத்த உத்தரவிட்டுள்ளார். அதாவது பிரிட்டிஷ் ஆட்சியாளர்களுக்குத் தீவிரவாதியாகத் தெரிந்த ஒரு சிங்களவருக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நியாயம் தேட முற்பட்டுள்ளார் ரணில்.

தான் பிரதமாராக இருந்த காலத்தில் கைது செய்யப்பட்டு தன்னுடைய ஆட்சிக் காலம் முழுவதும் சிறைச்சாலையிலேயே இருந்த ஒருவர் அடுத்த ஆட்சியில் குற்றமற்றவர் என்று விடுதலை செய்யப்பட்டுள்ளார். இந்த படுகொலையும் பெட்ரிஸ் வழக்கை போன்று மீண்டும் விசாரணைக்கு உட்படுத்த ஜனாதிபதி உத்தரவிடுவாரா?

நாடாளுமன்றத்தில் உரையாற்றிய எதிர்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசா "ஏகாதிபத்திய காலத்தில் எட்வர்ட் பெட்ரிஸ் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்க குழுவொன்றை நியமித்துள்ளது. இது நல்ல விடயம். இதேபோல் லசந்த விக்கிரமதுங்க, ஜோசப் பரராஜசிங்கம், ரவிராஜ், மகேஸ்வரன், சாகரிகா கோமஸ், பிரேம கீர்த்தி த அல்விஸ் மற்றும் ஏனைய இளைஞர்களின் படுகொலைகள் தொடர்பிலும் குழுக்களை நியமித்து விசாரணையை நடத்தி உண்மைகளை கண்டறியுங்கள்" எனத் தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

சனல் 4 தொலைக்காட்சியில் ஆசாத் மௌலானா வால் வழங்கப்பட்ட செவ்வியில் தெரிவிக்கப்பட்ட சட்டமா அதிபர் மற்றும் நீதிபதி இடமாற்றங்கள் மற்றும் ஈஸ்டர் குண்டு தாக்குதல் தொடர்பான ஏனைய விடயங்களை



நீதியான நடுநிலையாக விசாரணை செய்யக் கூடிய ஒரு விசாரணைக் குழுவை நியமித்தால் இந்தப் படுகொலை மட்டுமல்ல நடைபெற்ற அனைத்துப் படுகொலைகளுக்குமான சூத்திரதாரி கண்டுபிடிக்கப்படுவார்.

இந்த நாட்டில் நீதியற்று இருக்கின்றது என்பதற்கு பல விடயங்களை நாம் உதாரணமாக கொள்ளலாம். அதுவும் தமிழ் மக்களுக்கு வேறு சட்டமாகவும் சிங்கள மக்களுக்கு வேறு சட்டம் இருப்பதையும் நாம் அண்மைக் காலங்களாகக் கண் கூடாகவே தெரிந்து கொள்கின்றோம்.

ஆகவே, ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலை குறித்து மட்டுமல்லாமல் நீதி கிடைக்காமல் இருக்கின்ற அனைத்துப் படுகொலைகளுக்கும் நீதி கோரி தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இலங்கை அரசுக்குத் தொடர்ச்சியான அழுத்தம் கொடுக்க வேண்டும்.

அவ்வாறு கொடுக்கப்படும் அழுத்தங்களால்தான் கடந்த நல்லாட்சி காலத்தில் பிள்ளையான் கைது செய்யப்பட்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு தொடர்ந்து கொடுக்கப்படும் அழுத்தங்களால் ஆட்சியாளர்கள் பெட்ரிஸ் வழக்கை போன்று இந்த படுகொலை வழக்கையும் மீள விசாரணைக்கு உட்படுத்துவார். வெள்ளையர்களுக்கு தீவிரவாதியாகத் தெரிந்து கொலை செய்யப்பட்ட சிங்களவர்களுக்கு மட்டும்தான் அவர்கள் உத்தமர்கள் என்று வெள்ளையடிக்கப் போகின்றார்களா என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். அனைத்துக்கும் காலம்தான் பதில் சொல்லும்.

*- திலக்ஸ் ரெட்ணம்*

# இன்றைய ராசி பலன்கள் - 25.12.2023




இன்று நீங்கள் உங்களின் அறிவுத் திறனை இழக்க நேரும். உங்கள் பேச்சில் பதட்டமும் வேதனையும் பிரதிபலிக்கும். பிரார்த்தனை நல்ல பலனைத்தரும்.

பணியில் மந்த நிலை காணப்படும். முறையான திட்டமிடல் இருந்தால் நீங்கள் சிறப்பாக செயலாற்ற முடியும்.

உங்கள் துணையுடனான உங்களின் அணுகுமுறையில் ஈகோ பிரச்சினை காணப்படும். நட்பான அணுகுமுறை மூலம் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்த முடியும்.

தேவையில்லாத செலவுகளால் மனக் கவலைகள் ஏற்படும். அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக செலவுகள் கூடுதலாக இருக்கும்.

மூட்டு வலி அல்லது தோள்களில் வலி போன்ற உபாதைகள் ஏற்படலாம். பதட்டத்திலிருந்து விடுபட தியானம் மேற்கொள்ளுங்கள்.




இன்றைய நாளில் மோசமான சூழ்நிலை காணப்படும். அவற்றை சமாளிப்பதற்கு போதுமான தைரியம் இழந்து காணப்படுவீர்கள். எதிர்மறை எண்ணங்கள் நிறைந்திருக்கும். அதை மாற்றி நேர்மறையாக்குங்கள்.

இன்று வேலையில் மும்மரமாக இருப்பீர்கள். இணக்கமான அணுகுமுறை இருந்தால் உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணிகளை முடித்து வெற்றி காண்பீர்கள்.

நீங்கள் உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படுதலின் காரணமாய் நல்லுறவை பராமரிக்க முடியாது. இது மகிழ்ச்சியை சீர் குலைக்கும்.

இன்று நிதிநிலைமை ஏமாற்றத்தை அளிக்கும். குறைந்த அளவே நிதி காணப்படுவதால் உங்கள் பொறுப்புகளை பூர்த்தி செய்ய இயலாது.

பதட்டமும் உணர்ச்சிவசப்படுதலும் உங்கள் ஆரோக்கியத்தை பாதிக்கும்.




இன்று வளர்ச்சிக்கு சாதகமான நாளாக இருக்க வாய்ப்பில்லை. ஏற்ற இறக்கங்களுடன் காணப்படும். இன்று மனதை அமைதியாகவும் சமநிலையுடனும் வைத்திருக்க வேண்டியது மிகவும் அவசியம்.

உங்கள் பணியில் முன்னேற்றமான பலன்களைக் காண்பீர்கள். இன்று உங்களுக்கு கிடைக்கும் வாய்ப்புகளால் மகிழ்ச்சி அடைவீர்கள்.

உங்கள் துணையிடம் உங்கள் உணர்வுகளை திணிப்பீர்கள். நல்லிணக்கத்தைத் தக்க வைத்துக் கொள்ள அத்தகைய உணர்ச்சி பூர்வமான போக்குகளை தவிர்ப்பது நல்லது.

பண இழப்புக் காணப்படுகின்றது. உங்கள் அலட்சியமான போக்கால் நீங்கள் பணம் இழக்க நேரலாம். பணத்தைக் கவனமாகக் கையாள வேண்டும்.




இன்றைய நாள் நீங்கள் விரைந்து முடிவெடுப்பதற்கு சாதகமாக அமையும். உங்களின் உறுதியான மற்றும் தைரியமான மனநிலை மற்றும் அதனுடன் சேர்ந்த உங்கள் திறமை காரணமாக உங்கள் இலட்சியத்தில் நீங்கள் வெற்றி காண்பீர்கள்.

இன்று குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க இயலாது. உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணிகளை முடிப்பதில் தாமதம் இருக்கும்.

உங்கள் துணையிடம் இனிமையாகப் பேசுவீர்கள். இது உங்கள் துணையுடனான நல்லிணக்கத்தை மேம்படுத்த உதவும்.

பணவரவு உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். உங்கள் தேவைகளை சமாளிக்க போதுமான பணம் காணப்படும்.




இன்று அழுத்தமான சூழ்நிலைகளும் வெற்றிக்கு குறைந்த வாய்ப்புகளும் காணப்படுகின்றன. தினசரி அலுவல்களை எச்சரிக்கையான அணுகுமுறையுடன் கையாளவும்.

உங்களிடம் காணப்படும் குறைந்த தன்னம்பிக்கை காரணமாக திறமையாக பணிகளை ஆற்றுவது கடினம். இதனால் பணிகளில் தொய்வு காணப்படும். புணியாற்றும் முறைகளை திட்டமிடுவது நல்லது.

புரிந்துணர்வில் காணப்படும் பிரச்சினைகள் காரணமாக வாக்குவாதங்கள் ஏற்படும். உங்கள் துணையுடன் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இன்று வீணான செலவுகள் செய்வதற்கான சாத்தியம் உள்ளது.




இன்று கவலையுடன் காணப்படுவீர்கள். தினசரி செயல்களை மேற்கொள்வதும் கூட இன்று கடினமாக இருக்கும். களிப்பான அணுகுமுறையை பராமரிப்பதன் மூலம் இன்று நற்பலன்களைக் காணலாம்.

பணிகளில் தவறுகள் நேரலாம். பணிகளில் தவறுகள் நேராமல் தடுக்க உங்கள் நிலைமையை உத்தேசித்து உங்கள் செயல்திறனை மேம்படுத்த வேண்டும்.

பாதுகாப்பிண்மை என்ற உணர்வு உங்களை பாதிக்கும். அதனை உங்கள் துணையிடத்திலும் வெளிப்படுத்துவீர்கள். இது உறவில் நல்லிணக்கத்தை பாதிக்கும். உங்கள் துணையுடன் சேரந்து இன்றைய நாளை கழிப்பதற்கு உங்களை உற்சாகப்படுத்திக் கொள்ளுங்கள்.

செலவுகள் பெருகி காணப்படும்.உங்கள் தேவைகளை பூர்த்தி செய்துகொள்வதற்கு நீங்கள் கடன் வாங்குவீர்கள்.




இன்று யதார்த்தமான அணுகுமுறை தேவை. உங்கள் செயல்களில் உணர்ச்சி வசப்படக் கூடாது. அமைதியாக இருந்தால் எதிர்பார்த்த நற்பலன்கள் கிடைக்கும். வெளியிடங்களுக்குச் செல்வது ஆறுதலை அளிக்கும்.

குறித்த நேரத்துக்குள் கொடுக்கப்பட்ட பணிகளை முடிப்பீர்கள். உங்களின் சிறப்பான செயல்திறன் மூலம் உங்கள் மேலதிகாரிகளின் நம்பிக்கைக்கு பாத்திரமாவீர்கள்.

உங்கள் துணையுடன் உங்களின் அகந்தையான போக்கை காண்பிப்பதால் உறவின் நல்லிணக்கம் சீர்குலையும். மகிழ்ச்சியை தக்க வைத்துக்கொள்ள அத்தகைய உணர்வுகளை தவிர்த்துவிடுங்கள்.

தேவையில்லாத செலவினங்கள் ஏற்பட வாய்ப்பிருப்பதால் உங்கள் செலவு செய்யும் பழக்கத்தை கட்டுப்படுத்துவது அவசியம்.




உறுதியுடனும் தைரியத்துடனும் செயற்பட்டு இன்று செயல்களில் வெற்றி கண்டு மகிழ்வீர்கள். உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

உங்களின் பணியாற்றும் முறையில் உங்கள் திறமை வெளிப்படும். நீங்கள் செய்த பணிக்காக நற்பெயர் பெறுவீர்கள்.

உங்கள் துணையிடம் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். இருவரும் பொருத்தமான ஜோடிகளாய் மகிழ்ச்சியையும் களிப்பையும் அனுபவிப்பீர்கள்.

இன்று பணம் அதிக அளவில் காணப்படும். உங்கள் சேமிப்பு அதிகரிக்கும். உங்களுக்கு ஆழ்ந்த திருப்தி உண்டாகும்.

இன்று ஆரோக்கியத்தில் எந்தவிதமான குறைபாடுகளுமின்றி முழு ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள். நீங்கள் மகிழ்ச்சியாக காணப்படுவீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 25.12.2023




முக்கியமான விஷயங்களை நிறைவேற்றுவதற்கு உகந்த நாள். ஆன்மீகத்தில் உங்களை ஈடுபடுத்திக் கொள்வதன் மூலம் அமைதியும் ஆறுதலும் கிடைக்கும்.

உங்கள் பணிவளர்ச்சியில் தடைகள் காணப்படும். முறையான திட்டமிடல் மூலம் பணிகளைக் கையாண்டால் பணிச் சுமைகளைக் கையாளலாம்.

உங்கள் துணையுடனான நேர்மையான போக்கு அவரை மகிழ்ச்சியில் ஆழ்த்தும். இந்த நேர்மை சரியான புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்ள வழிவகுக்கும்.

பணம் அதிகம் பெறுவதற்கான அதிர்ஷ்டம் உள்ளது. கணிசமான தொகையை சேர்ப்பீர்கள். பயனுள்ள விஷயங்களுக்கு பணத்தை செலவு செய்வீர்கள்.

உங்களிடம் காணப்படும் ஆன்மீக சக்திகளின் காரணமாக ஸ்திரமான ஆரோக்கியத்தை நீங்கள் பராமரிக்க முடியும்.




உங்கள் நலன்களை ஊக்குவிக்கும் விஷயங்களில் முடிவெடுப்பதற்கு இன்று உகந்த நாள். இன்று நீங்கள் நிறைவான திருப்தியுடன் காணப்படுவீர்கள்.

உங்கள் செயல்திறன் மேலதிகாரிகளால் பாராட்டப்படும். பணியில் உங்கள் திறமைகளை காண்பிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் அமைதியான தருணங்களைப் பகிர்ந்து கொள்வீர்கள். இது உங்கள் துணையுடன் நல்ல நட்பான உறவுமுறையை வளர்த்துக்கொள்ள உதவும்.

நிதி நிலைமை மிகவும் திருப்திகரமாகக் காணப்படும். உங்கள் சேமிப்பு ஆற்றல் அதிகரிக்கும்.

உங்களின் சிறந்த மனநிலை காரணமாக சிறந்த ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள்.




இன்று அறிவு பூர்வமான அணுகு முறையுடன் விஷயங்களை கையாள வேண்டும். வெற்றி அடைவதற்கு நீங்கள் கடினமான முயற்சியுடன் போராட வேண்டும்.

உங்கள் செயல்திறன் மூலம் பணியில் நல்ல பலன்கள் கிடைக்கும். உங்கள் மேலதிகாரிகளின் நன்மதிப்பையும் பாராட்டையும் பெறுவீர்கள்.

மோதல்கள் ஏற்படாமல் இருக்க உங்கள் துணையுடன் பேசும் போது உங்கள் வார்த்தைகளில் மிகவும் கவனமாகப் பேச வேண்டும். எதையும் இலேசாக எடுத்துக் கொள்ளப் பழகுங்கள்.

இன்று முக்கியமான நிதி முடிவுகளை எடுப்பதற்கு ஏற்ற நாள் அல்ல. பெரிய முதலீடுகளில் ஈடுபடுவதை தவிர்க்க வேண்டும். ஏனெனில் அதில் நல்ல வருமானம் கிடைக்காது.




இன்று முன்னேற்றமான பலன்கள் காணப்படும். உங்களுடைய உறுதியான முயற்சியினால் நீங்கள் மேற்கொண்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். மன ஆற்றலும் நேர்மறையான எண்ணங்களும் இருந்தால் வெற்றி கிடைக்கும்.

பணியில் தவறுகளைக் குறைக்கும் வண்ணம் உங்களை மேம்படுத்திக் கொள்ள வேண்டும். கவனச் சிதறல்கள் ஏற்படாவண்ணம் கவனித்துக் கொள்ளுங்கள்.

உங்கள் துணையின் விருப்பதுக்கேற்ப நடந்து கொள்வீர்கள். இது உங்கள் இருவருக்கிடையேயான உறவுப் பிணைப்பை வலுப்படுத்தும்.

நிதிநிலைமை ஸ்திரத்தன்மையுடன் காணப்படும். கையில் ஓரளவு பணம் காணப்படும். அதை ஆக்க பூர்வமான வகையில் பயன்படுத்துவீர்கள்.

எந்தவிதமான உபாதைகளும் காணப்படாது.








# ரூ.2 கோடி பெறுமதி பீடி இலைகள் நுரைச்சோலையில் மடக்கப்பட்டன

(ரஸீன் ரஸ்மின்)

கற்பிட்டி – நுரைச்சோலை பகுதியில் சட்டவிரோதமாக கொண்டு செல்லப்பட்ட சுமார் 2 கோடிக்கும் அதிக பெறுமதியுடைய பீடி இலைகள் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

எனினும் இந்த சம்பவத்தில் எவரும் கைது செய்யப்படவில்லை என கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

வடமேற்கு கடற்படை கட்டளையின் தம்பபண்ணி கடற்படையினரால் நுரைச்சோலை பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் போதே குறித்த பீடி இலைகள் மீட்கப்பட்டுள்ளன.

இதன்போது, நுரைச்சோலை, பொருளாதார மத்திய நிலையத்திற்கு அருகில் சந்தேகத்திற்கிடமான முறையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறியொன்றை கடற்படையினர் பரிசோதனை செய்தனர்.

இதன்போது, அந்த லொறியில் 63 உரமூடைகளில் மிகவும் சூட்சகமான முறையில் அடைத்து வைக்கப்பட்டிருந்த 1,955 கிலோ கிராம் பீடி இலைகள் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டன.

சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்ட இந்தப் பீடி இலைகள் இலங்கையில் பல இடங்களுக்கும் விநியோகிக்கும் நோக்கில் இவ்வாறு லொறியொன்றின் மூலம் கொண்டு செல்வதற்கு சந்தேக நபர்கள் முயற்சித்திருக்கலாம் என தாம் சந்தேகிக்கின்றனர் எனக் கடற்படையினர் குறிப்பிட்டனர்.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட பீடி இலைகள் மற்றும் சொகுசு லொறி என்பன மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக கட்டுநாயக்க சுங்க அலுவலத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன என கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, கடந்த சில மாதங்களில் மாத்திரம் கற்பிட்டி பிரதேசத்தில் இப்பந்தீவு, கீரிமுந்தல், மாம்புரி , நுரைச்சோலை மற்றும் தளுவ உள்ளிட்ட பகுதிகளில் இருந்து சட்டவிரோதமாக நாட்டுக்கு கொண்டுவரப்பட்ட பல கோடி ரூபா பெறுமதியான பீடி இலைகள் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைக்கு சொந்தமான கடல் மற்றும் கரையோர பகுதியில் சட்டவிரோத நடவடிக்கைகளை தடுக்கும் வகையில் இலங்கைக் கடற்படையினர் தொடர்ந்தும் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.







# 'ஊடக சிகரம்' தில்லைநாதனுக்கு கௌரவிப்பு




மூத்த பத்திரிகையாளர் சின்னத்துரை தில்லைநாதனுக்கு 'ஊடக சிகரம்' எனும் சிறப்பு கௌரவம் வழங்கி யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தினரால் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றுள்ளது.

இலங்கைப் பத்திரிகை ஸ்தாபனத்துடன் இணைந்து இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தினால் அண்மையில் நடத்தப்பட்ட ஊடகவியலாளர்களுக்கான சிறப்பு விருது வழங்கும் விழாவில் வடமராட்சி மண்ணின் மைந்தனும் மூத்த பத்திரிகையாளருமான சின்னத்துரை தில்லைநாதனுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் யாழ் வடமராட்சி ஊடக இல்லத்தின் பருத்தித்துறையில் உள்ள அலுவலகத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற கௌரவிப்பு நிகழ்வில் யாழ் வடமராட்சி ஊடக இல்லத்தினரால் "ஊடக சிகரம்" எனும் சிறப்பு கௌரவம் வழங்கப்பட்டது.

வடமராட்சி புலோலியைச் சேர்ந்த சின்னத்துரை தில்லைநாதன் அரை நூற்றாண்டுக்கும் அதிகமான காலமாக இலங்கையின் முன்னணி தேசிய தமிழ் பத்திரிகை வீரகேசரியின் பிராந்திய செய்தியாளராக தொடர்ச்சியாக பணியாற்றிவருபவர்.

கண்டியில் இருந்து வெளிவந்த 'செய்தி' வார இதழின் யாழ்ப்பாணப் பிராந்திய செய்தியாளராக 1968 ஆம் ஆண்டு இணைந்து பத்திரிகைத்துறையில் பிரவேசித்தார். பின்பு யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியான 'ஈழநாடு' பத்திரிகையின் நிருபராக சேர்ந்து 1985 ஆம் ஆண்டுவரை பணியாற்றினார்.

வீரகேசரியின் புலோலி செய்தியாளராக 1972 ஆம் ஆண்டில் இணைந்து கொண்ட தில்லைநாதன் பின்னர் வடமராட்சி பிரதேசம் முழுமைக்குமான வீரகேசரியின் செய்தியாளராக நியமிக்கப்பட்டார். 1997 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம் ஆண்டுவரை அந்த பத்திரிகையின் யாழ்ப்பாணச் செய்தியாளராக பணியாற்றும் பொறுப்பும் அவருக்கு ஒப்படைக்கப்பட்டது.

'உதயன்' நாளிதழ் ஆரம்பிக்கப்பட்ட 27.11.1985 முதல் 2020 ஆம் ஆண்டு வரை வடமராட்சி செய்தியாளராக 36 ஆண்டுகள் பணியாற்றியிருந்தார்.

யாழ்ப்பாண மாவட்டத்தின் சிறந்த செய்தியாளருக்கானவிருதை இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் 2003 ஆம் ஆண்டில் வழங்கிக் கௌரவித்தது. நெருக்கடியான சூழ்நிலைகளில் யாழ்ப்பாணத்தில் அவர் ஆற்றிய செய்திச்சேவைக்காக சிறப்பு விருது அதே ஆண்டில் இலங்கை பத்திரிகை ஆசிரியர்கள் சங்கத்தினால் வழங்கப்பட்டது.

அத்துடன் தில்லைநாதனின் சேவையைப் பாராட்டி பருத்தித்துறை பிரதேச செயலகம் 'கலைப்பரிதி', 'கலைச்சாகரம்' என்ற பட்டங்களை வழங்கியது. வடமராட்சி பிரதேசத்தில் உள்ள சனசமூக நிலையங்கள் மற்றும் கிராம அபிவிருத்தி சங்கங்கள் பலவும் தில்லைநாதனின் ஊடகசேவையைப் பாராட்டி கௌரவித்தன.

அரைநூற்றாண்டுக்கும் அதிகமான காலமாக ஊடகத்துறையில் பணியாற்றிவரும் அவர் இலத்திரனியல் ஊடகங்களுக்கும் தனது பங்களிப்புகளைச் செய்து வருகிறார். யுத்த கால நெருக்கடிகள், அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் துணிச்சலுடன் பயணித்து 55 ஆண்டுகள் கடந்த நிலையிலும் இன்றும் ஊடகத் துறையில் பணியாற்றிவரும் மூத்த ஊடகவியலாளர் சி.தில்லைநாதனின் ஊடக செயற்பாட்டினை சிறப்பிக்கும் வகையில் யாழ் வடமராட்சி ஊடக இல்லத்தினரால் 'ஊடக சிகரம்' என்று சிறப்பு கௌரவம் வழங்கப்பட்டு கௌரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.




